

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.12.2025) சென்னையில் நடைபெற்ற தியாகராயநகர் கிழக்கு பகுதி கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ஜெ.கருணாநிதி அவர்களின் மகன் சிபி – வர்ஷா (எ) வர்ஷலட்சுமி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார். உடன் அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், பெருமாட்டுநல்லூர் ஊராட்சியில் 110/11 கிலோ வாட் துணை மின் நிலையம் கட்டுமானப் பணிகளுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அடிக்கல் நாட்டினார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தி.சினேகா, சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், ஒன்றியக் குழுத் தலைவர் உதயா கருணாகரன், நகர்மன்றத் தலைவர் கார்த்திக் தண்டபானி, ஒன்றிய பொறுப்பாளர் கே.பி.ராஜன், கே.எஸ்.ரவி, ஊராட்சி மன்றத் தலைவர் பகவதி நாகராஜ் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்

### திருநங்கைகள் – மாற்றுத்திறனாளிகள் சமூகத்தில் முன்னேறுவதற்கான சூழலை உருவாக்கும் நோக்கில்

# “எல்லோருக்கும் எல்லாம்” எனும் தலைப்பில் விழிப்புணர்வுப் போட்டிகள்!

## செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் நடத்துகிறது!

சென்னை,டிச.17-

**முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள், “சமூகம் என்பது அனைவருக்கும் சம உரிமையும் சம வாய்ப்பையும் வழங்கும் ஒரு குடும்பம்” என்று வலியுறுத்திய நிலையில், திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் சமூகத்தில் முழுமையாக இணைந்து முன்னேறுவதற்கான சூழலை உருவாக்கும் நோக்குடன், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் “எல்லோருக்கும் எல்லாம்” என்ற தலைப்பில் விழிப்புணர்வுப் போட்டிகளை நடத்தவுள்ளது.**

**அதன் விவரம் வருமாறு:**

சமூகத்தில் திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் சம உரிமையுடனும், பாதுகாப்புடனும், மரியாதையுடனும் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி முன்னேறுவதற்கான சூழலை உருவாக்குவது திராவிட மாடல் அரசின் முக்கிய இலக்காகும். இந்த இலக்கை அடைய, அரசு கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவம் மற்றும் சமூகப் பாதுகாப்பு உள்ளிட்ட பல துறைகளிலும் சிறப்பு நலத்திட்டங்களைக் கொண்டு வந்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி வருகிறது.

திருநங்கை நல வாரியம் நிறுவுதல், இலவசப் பாலின மாற்று அறுவைச் சிகிச்சை, திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், உதவித்தொகைத் திட்டங்கள், அடையாள அட்டை வழங்குதல், அரசு வீடுகளில் முன்னுரிமை அளித்தல் போன்ற சலுகைகளை வழங்கி, அரசு அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துகிறது. அண்மைக் காலமாக அரசின் மனிதநேயம், சமூக நீதி, சமத்துவம், சமூக இணைப்பு முயற்சிகள் மேலும் வலுப்பெற்று, திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தங்கள் திறமைகளையும் வாழ்வியல் முன்னேற்றத்தையும் பெருமையுடன் வெளிப்படுத்தும் புதிய வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை நிலைநாட்டி, அவர்களின் வாழ்வை மேம்படுத்தும் உயரிய நோக்கத்துடன் தமிழ்நாடு அரசால் ஆரம்பிக்கப்பட்ட திட்டம் “தமிழ்நாடு உரிமைகள் திட்டம்”. இது, மாற்றுத்திறனாளிகள் நலத்திட்டங்களுக்காக அரசு அலுவலகங்களுக்குச் சென்று அலைய வேண்டிய தேவையைப் போக்கி, அவர்கள் வீட்டிலிருந்தே அனைத்துச் சேவைகளையும் பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டை, நலத்திட்டங்களுக்கான விண்ணப்பங்கள், செவித்திறன் கருவிகள் (Hearing Aids) உள்ளிட்ட உதவி உபகரணங்கள், மருத்துவ மதிப்பீடு, கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டுதல், அத்துடன் மனநல ஆலோசனை மற்றும் ஆரம்பத் தலையீடு சேவைகள் போன்ற அனைத்து முக்கிய மறுவாழ்வு உதவிகளையும் இத்திட்டம் உள்ளடக்கியுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தியாவிலேயே முதல் மாநிலமாக சமூக நீதி மற்றும் சமத்துவத்தை நிலைநாட்ட உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவை அறிவித்துள்ளார்கள். இந்த அறிவிப்பின் விளைவாக, மாற்றுத்திறனாளிகள் இனி ஊராட்சிகள், நகராட்சி, மாநகராட்சி ஆணையங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளிட்ட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல் மூலமாகவோ அல்லது நியமனம் மூலமாகவோ நேரடி பிரதிநிதித்துவம் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.




இது தவிர, வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கு சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேஷன் பொருள்கள் விநியோகம் செய்யும் பொருட்டு, “முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்” செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அது மட்டுமின்றி தமிழ்நாடு அரசு, பாரா ஒலிம்பிக் வீரர்களை ஊக்குவிப்பதிலும், அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதிலும் முக்கியப் பங்காற்றி வருகிறது. குறிப்பாக, பதக்கம் வென்ற வீரர்களுக்கு வழங்கும் ஊக்கத்தொகை மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு தமிழ்நாட்டின் குறிப்பிடத்தக்க சாதனைகளாகும். சர்வதேசப் போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் தமிழ்நாடு பாராஒலிம்பிக் வீரர்களுக்கு மற்ற மாநிலங்களுக்கு நிகராக, அல்லது அதிகமாக, தமிழ்நாடு அரசு பெருமளவிலான பணப் பரிசுகளை வழங்குகிறது. இது வீரர்களுக்கு மிகப் பெரிய அங்கீகாரமாகும்.

சமூக நீதி மற்றும் சமத்துவத்தை நிலைநாட்ட அரசின் தீவிர முயற்சிகளைப் பிரதிபலிக்கும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ஊடக மையம் “எல்லோருக்கும் எல்லாம்” என்ற தலைப்பில் விழிப்புணர்வு போட்டிகள் நடத்தவுள்ளது.

**போட்டிகளும் அதன் விதிமுறைகளும் பின்வருமாறு:**

**1.என் வாழ்வை மாற்றிய அரசுத் திட்டம்**

திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்காக பிரத்யேகமாக நடத்தப்படும் இந்த போட்டிகளின் நோக்கம் என்னவெனில், உங்கள் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கும் அரசுத் திட்டம் அல்லது முன்னெடுப்பு குறித்த உங்கள் அனுபவத்தைப் பின்வரும் படைப்பு வடிவங்களில் ஒன்றைத் தேர்வு செய்து அதன் மூலம் வெளிப்படுத்தலாம்.

**கட்டுரைப் போட்டி – அதிகபட்சம் 2 பக்கங்கள் (word/pdf)**

ரீல்ஸ் போட்டி - 60 - 90 வினாடிகளில்

**2.திறமை தேடல் போட்டி**

a) திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தங்களது தனித் திறமைகளை வெளிப்படுத்தும் விதமாக வீடியோ/ரீல்ஸ் பதிவு செய்து அனுப்பவும்.

b) சமூகத்திற்கு நீங்கள் ஆற்றிய பங்களிப்பை வெளிப்படுத்தும் விதமாக வீடியோ/ரீல்ஸ் பதிவு செய்து அனுப்பவும்.

**3. வினாடி வினா போட்டி**

திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் மற்றும் அவர்களுக்கு அரசின் நலத்திட்டங்கள் குறித்து விழிப்புணர்வை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்த வினாடி வினா போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**4. இணைந்து உயர்வோம் (Let's Rise Together)**

மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கான திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாகவோ அல்லது உங்கள் பகுதியில் உள்ள அரசு/தனியார் மாற்றுத்திறனாளிகள் பள்ளிகள் குறித்த தகவலை ரீல்ஸ் வடிவில் எடுத்து அதனை TNDIPR சமூக வலைதளங்களை Tag செய்து #LeaveNoOneBehind என்ற hashtag-ஐ பயன்படுத்தி உங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரவும்.

போட்டியில் கலந்துகொள்பவர்கள் தங்கள் படைப்புகளை இம்மாத இறுதிக்குள், மின்னஞ்சல்/QR Code/ Whatsapp பயன்படுத்தி அனுப்பி வைக்க வேண்டும்.

1. மின்னஞ்சல்: tndiprmhdec@gmail.com
2. விரைவுத் துலங்கல் குறியீடு (QR Code):
3. வாட்ஸ்அப் எண் (Whatsapp No): ஊடக மையத்தின் வாட்ஸ்அப் எண் 9498042408-க்கு ஒரு ‘ஹாய்’ (Hi) அனுப்பி லிங்கைப் பெறுங்கள்.

இவ்வாறு அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” – இன்று

# சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை,டிச.17-

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 8.12.2025 அன்று என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற தலைப்பில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற திமுக மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட செயல்திட்டத்தின் படி இன்று 17.12.2025 புதன்கிழமை அன்று சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள் விவரம்.

**கொளத்தூர் கிழக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 70அ. பாகம்: 200. இடம்: மைலாப்பா குறுக்கு தெரு, எண்.5, அயனாவரம், சென்னை-23.

மாலை: 4.30 மணி: வட்டம் 70அ. பாகம்: 201. இடம்: ஜெவகர் டைமன் பிலாட்ஸ், 25/G3. பொன் வேல்புரம், 4வது தெரு, அயனாவரம், சென்னை-23.

மாலை: 5.00 மணி: வட்டம் 70அ. பாகம்: 202. இடம்: கான்ஷ்ரபுல் ரோடு, 462R/UP5, நேருஜி மண்டபம், அயனாபரம், சென்னை-23.

மாலை: 5.30 மணி: வட்டம் 70அ. பாகம்: 203. இடம்: RC அபிநந்தன் பிளாட்ஸ், பு.கண்.23, ப.எண்.9A, அன்ரசன் தெரு, அயனாவரம், சென்னை-23.

**கொளத்தூர் மேற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 64. பாகம்: 4. இடம்: தில்லை நகர்

மாலை: 4.30 மணி: வட்டம் 65 பாகம்: 55. இடம்: கணேஷ் மகால், பூம்புகார் நகர்

மாலை: 5.00 மணி: வட்டம் 69. பாகம்: 213. இடம்: 4வது தெரு, ஜி.கே.எம்.காலனி

**துறைமுகம் கிழக்கு பகுதி**

மாலை: 5.00 மணி: வட்டம்: 60அ. பாகம்: 110, 115, 114. இடம்: சத்யா நகர், பி.பகுதி, காமராஜர் சாலை, சென்னை-1.

**துறைமுகம் மேற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம்: 54. பாகம்: 4, 5, 6. இடம்: பெருமாள்



தெரு, கொண்டிதோப்பு, சென்னை-1.

**எழும்பூர் வடக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 77அ. பாகம்: 51, 59, 60

**எழும்பூர் தெற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 58. பாகம்: 88, 89, 90, 91. இடம்: தக்கார் தெரு, புரசைவாக்கம்

**திரு.வி.க.நகர் வடக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம்: 71, பாகம்: 12. இடம்: எண்.24/9, பள்ளி சாலை, பெரம்பூர்.

மாலை: 4.30 மணி: வட்டம்: 71, பாகம்: 13. இடம்: எண்.25, கண்ணபிரான் கோயில் தெ, பெரம்பூர்.

மாலை: 5.00 மணி: வட்டம்: 71, பாகம்: 14. இடம்: எண்.16, குருமூர்த்தி கார்டன் தெரு, பெரம்பூர்.

மாலை: 5.30 மணி: வட்டம்: 71, பாகம்: 15. இடம்: எண்.16/2, ஜட்ஜ் பரமசிவம் தெரு, பெரம்பூர்.

மாலை: 6.00 மணி: வட்டம்: 71அ, பாகம்: 105. இடம்: டாக்டர் அம்பேத்கர் கல்லூரி சாலை

மாலை: 6.30 மணி: வட்டம்: 71அ, பாகம்: 106. இடம்: பி.எஸ். மூர்த்தி நகர், புளியந்தோப்பு

மாலை: 7.00 மணி: வட்டம்: 71அ, பாகம்: 107. இடம்: பி.எஸ். மூர்த்தி நகர், புளியந்தோப்பு

மாலை: 7.30 மணி: வட்டம்: 71அ, பாகம்: 113. இடம்: ஈடன் கார்டன், ஜமாலியா

மாலை: 8.00 மணி: வட்டம்: 71அ, பாகம்: 114. இடம்: ஈடன் கார்டன் ஜமாலியா

**திரு.வி.க.நகர் தெற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம்: 76, பாகம்: 91, 92, 94

மாலை: 4.00 மணி: வட்டம்: 76அ, பாகம்: 186, 189, 190

வில்லிவாக்கம் கிழக்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம்: 96, பாகம்: 198, 199. இடம்: புது தெரு க.எண்.1 முதல் 70 வரை, புது தெரு, க.எண்.71 முதல் 140 வரை

மாலை: 4.30 மணி: வட்டம்: 98அ, பாகம்: 236, 237, 238. இடம்: சன்னியாசிபுரம் 1வது தெரு, 2வது தெரு, மெயின் தெரு, க. எண்.50 முதல் பம்பிங் ஸ்டேஷன் (ம) மனநல காப்பகம், கட்டியப்பன் 1வது , 2வது தெரு, அப்பார்ட்மெண்ட், ராணி விஷ்வாணி.

**வில்லிவாக்கம் மேற்கு பகுதி**

மாலை: 5.00 மணி: வட்டம்: 95, பாகம்: 2, 8, 24. இடம்: திருவீதி அம்மன் கோயில், பஜார் தெரு, தேவர் தெரு

மாலை: 6.00 மணி: வட்டம்: 95அ, பாகம்: 73, 78, 84. இடம்: அகத்தியர் நகர் N.பிளாக், சாய்முருகன் தெரு, எம்பார் நாயுடு 1வது தெரு.

**அம்பத்தூர் வடக்கு பகுதி.**

மாலை: 4.00 மணி: வட்டம்: 86, பாகம்: 214. இடம்: விநாயகர் ஆலயம்

மாலை: 4.30 மணி: வட்டம்: 86, பாகம்: 225. இடம்: கங்கை சாலை

மாலை: 5.00 மணி: வட்டம்: 85, பாகம்: 162. இடம்: மாணிக்க விநாயகர் கோவில் தெரு, ராமாபுரம்.

மாலை: 5.30 மணி: வட்டம்: 85, பாகம்: 167. இடம்: திருவள்ளுவர் தெரு, ராமாபுரம்

மாலை: 6.00 மணி: வட்டம்: 81, பாகம்: 141. இடம்: சோழம்பேடு மெயின்ரோடு

மாலை: 6.30 மணி: வட்டம்: 81, பாகம்: 142. இடம்: திருவேங்கட நகர்

மாலை: 7.00 மணி: வட்டம்: 80, பாகம்: 92. இடம்: விஜயலஷ்மி புரம், அம்பேத்கார் தெரு

மாலை: 7.30 மணி: வட்டம்: 80, பாகம்: 93. இடம்: விஜயலஷ்மிபுரம், பெரியார் தெரு

மாலை: 8.00 மணி: வட்டம்: 79, பாகம்: 3. இடம்: சங்கம் தெரு.

மாலை: 8.30 மணி: வட்டம்: 79அ, பாகம்: 110. இடம்: வி.வி.கிரி தெரு, ராம்நகர்.

**அம்பத்தூர் தெற்கு பகுதி.**

மாலை: 5.00 மணி: வட்டம்: 88, பாகம்: 273. இடம்: அன்னை கல்யாண மண்டபம்

மாலை: 5.30 மணி: வட்டம்: 88, பாகம்: 274. இடம்: பொன்னி அம்மன் கோயில் தெரு, கலைவாணர் நகர்

மாலை: 6.00 மணி: வட்டம்: 89, பாகம்: 249. இடம்: ஆபிசர்ஸ் காலனி

மாலை: 6.00 மணி: வட்டம்: 90, பாகம்: 305. இடம்: அரசுகுடியிருப்பு, திருவல்லீஸ்வரர் நகர்

மாலை: 6.00 மணி: வட்டம்: 90, பாகம்: 310. இடம்: அரசு குடியிருப்பு, திருவல்லீஸ்வரர் நகர்

மாலை: 6.00 மணி: வட்டம்: 93, பாகம்: 339. இடம்: 2வது பிளாக், புகழேந்தி சாலை

மாலை: 6.30 மணி: வட்டம்: 89, பாகம்: 257. இடம்: அக்சயா காலனி

மாலை: 6.30 மணி: வட்டம்: 93, பாகம்: 340. இடம்: 3வது பிளாக், நக்கீரன் சாலை

மாலை: 6.30 மணி: வட்டம்: 87, பாகம்: 203. இடம்: கம்பர் தெரு, பாடி

மாலை: 6.30 மணி: வட்டம்: 87, பாகம்: 204. இடம்: அவ்வை தெரு, பாடி.

மேற்கண்ட பாகங்களில் நடைபெறும் கூட்டங்களில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ பகுதி / வட்ட நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், BLA2, BDA, BLC ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவித்துள்ளார்.





சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி, 74–வது ‘அ’ வட்டத்தில் பாகம் எண்கள் 28,34,35,36,37,82 மற்றும் 74 வது வட்டத்தில் பாகம் எண்கள் 38,39,40,41,42 ஆகிய பாகமுகவர்கள் தலைமையில், நேற்று (16.12.2025) என் வாக்கு சாவடி, வெற்றி வாக்கு சாவடி கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேயர் திருமதி பிரியாராஜன், சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம்கவி, தொகுதி பொறுப்பாளர் என்.கிருஷ்ணமூர்த்தி, பகுதி செயலாளர் செ.தமிழ்வேந்தன், பகுதி துணை செயலாளர் பெரம்பூர் ஆர்.ராஜன், வட்ட கழக செயலாளர் ஜி.கிருஷ்ணகுமார், எஸ்.புஷ்பராஜ் , வட்ட அவைத் தலைவர் த. வெங்கடேசன், வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### திருவள்ளூர் மாவட்டம் காக்களூரில் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில்

# முதலமைச்சரின் சிறிய விளையாட்டு அரங்க கட்டுமானப் பணிகள்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் துவக்கி வைத்தார்!

திருவள்ளூர் டிச 17;

திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் ஒன்றியம் ஒன்றியம், காக்களூர் ஊராட்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி ரூ.3 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சரின் சிறிய விளையாட்டு அரங்க கட்டட கட்டுமான பணிகள் துவக்க விழா நடைபெற்றது இதில் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாவட்டஆட்சியர்மு.பிரதாப்,ஆகியோர் முன்னிலை வகித்தார்கள் ஒன்றிய செயலாளர் ஆர்.ஜெயசீலன் அனைவரும் வரவேற்றார் இதில்.சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி வைத்து துவக்கி வைத்தார் இதனை தொடர்ந்து பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்

அப்போது அமைச்சர்பேசுகையில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவையில் 44 சட்டமன்ற தொகுதிகளில் தலா ரூ.3 கோடி மதிப்பீட்டில் மொத்தம் ரூ.132 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சரின் சிறிய விளையாட்டு அரங்கம் கட்டப்படும் என அறிவித்தார்கள். அதன்படி திருவள்ளூர் மாவட்டத்தில் பூவிருந்தவல்லி, பொன்னேரி மற்றும் கும்மிடிப்பூண்டி ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளில் தலா ரூ.3 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சரின் சிறிய விளையாட்டு அரங்கம் அமைக்க தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் ஒப்புதல் வழங்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம் காக்களூர் ஊராட்சியிலும், பொன்னேரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மீஞ்சூர் பேரூராட்சி பகுதியிலும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கும்மிடிப்பூண்டி ஊராட்சி

ஒன்றியம் பூவலம்பேடு ஊராட்சியிலும் முதலமைச்சரின் சிறிய வெளிநாட்டு அரங்கம் அமைக்கப்படவுள்ளது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் ரூ.2.50 கோடி நிதியும் மற்றும் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலுருந்து ரூ.50 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.3 கோடி நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் துவங்கப்படவுள்ளது. முதலமைச்சரின் சிறிய விளையாட்டு அரங்கில் ஓடுதளம், நவீன உடற்பயிற்சி கூடம், உடை மாற்று அறைகள், கூடைப்பந்து அரங்கு, கைப்பந்து அரங்கு, கோகோ அரங்கு ஆகியவை அமைக்கப்படவுள்ளன என சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்/ இணை இயக்குநர் வை.ஜெயகுமார், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் வி.சேதுராஜன், பொதுகுழுஉறுப்பினர்த.எத்திராஜ், ஒன்றியநிர்வாகிகள்கே.கே.சொக்கலிங்கம், பேரத்தூர்கி. தரணி, டி.எம்.ராமச்சந்திரன், டி.கே.சீனிவாசன், எஸ்.சௌந்தரராஜன், வே.தியாகராஜன், அயலகம்அணிசரவணன், டி.கே.பூவண்ணன், என்.ஜனார்த்தனன், ஶ்ரீதர், சரன் ராஜ், சூரிய, செந்தில், கிரிஸ்டன், கோவிந்தராஜன், சந்துரு, மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.





சைதை மேற்கு பகுதி 139வது (அ) வட்ட பகுதி பிரதிநிதி கொடிசுரேஷ் இல்லப் புதுமனை புகுவிழாவில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தார். பகுதி செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி, இரா.துரைராஜ், எம்.சி, மாவட்ட துணை செயலாளர் பாலவாக்கம் விஸ்வநாதன், பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஶ்ரீதரன், பகுதி கழக நிர்வாகிகள் டி.என். சிவமணி, த.சம்பத், வட்ட கழக செயலாளர் சை.மு.சேகர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.